சுஜாதாவுக்கு ஒரு தமிழ் வணக்கம்

என் இளமைப் பருவக் காலத்தில் ஒரு மொழிநடையை ஆச்சரியத்துடன் பார்த்தேன். அது கணையாழி சஞ் சிகையில் கடைசிப் பக்கம் என்ற பத்தி (Column). எழுத் தில் சிறீரங்கம் எஸ்.ஆர் என்று எழுதியவரின் மொழி, நடை அது. அது ஒரு புறம் என்றால் எமது மகாஜனாக் கல்லூரியின் நூலகத்தில் சுஜாதா என்பவர் எழுதிய பாலம், நைலான் கயிறு, ஜே.கே என்ற கதைகளை வாசி த்து (இப்போது நினைவில் நிற்பவை இப்பெயர்கள்தாம்) அம்மொழி நடையை மனதுள் நிறையச் சிலாசித்தேன்.

எளிமையான சொற்கள். மூன்று நான்கு சொற்களாலான வசனங்கள். வாசகர்கள் காண வேண்டியதை காட்சிப்படுத்தும் பந்தியமைப்பு. நவீன மொழி ஆளுமை, குறும்பு கொப்புளிக்கும் வாக்கியத்தொடர், புதுமையான வாக்கிய உருவகம் (உதாரணமாக: 'டொக் டொக் என்று கதவைத் தட்டினேன்' என்பதற்குப் பதிலாக 'கதவை டொக் டொக்கினேன்' என்கிற மாதிரி) இப்படி சுஜாதாவின் மொழிநடை தமிழுக்கு மிக மிகப் புதுமை.

பிறகு நான் ஜானகிராமன், அசோகமித்திரன், வண்ண நிலவன், இந்திரா பார்த்தசாரதி என்று வாசித்தது போல சுஜாதாவையும் தேடி வாசிக்கத் தொடங்கினேன். அப்படி வாசித்ததில் பல கதைகள் என்னை பரவசப்படுத்தின. குறிப்பாக நகரம் என்ற சிறுகதையை தமிழில் மிகச்சிறந்த சிறுகதைகள் ஒன்றெனக் கொள்வேன். அதில் எனக்குத் தயக்கம் இல்லை.

அவ்வாறு நான் சுஜாதாவை மெச்சிய இன்னொரு கதை 'குருபிரசாத்தின் கடைசித் தினம்' ஒரு தொழிற்சாலைக் கடைநிலை ஊழியன் மரணமான அன்றைய தினம் பற்றிய கதை. நுணுக்கமான விவரிப்புடன் கூடிய அற்புதமான கதை. ஒரு நகரத்து ஆஸ்பத்திரியில் இற க்கப் போகிற தன் பிள்ளை அலைக்கழிக்கப்படுவதன் ஆற்றாமையை கிராமத்துத் தாய்க் கிழவியின் பார்வையில் அற்புதமாக நெய்த சிறுகதை 'நகரம்' என் றால், ஒரு சதத்துக்குப் பெறுமதியில்லாமல் போகிற கடைநிலை ஊழியனின் மரணத்தை 'குருபிரசாத்தின் கடைசித் தினம்' சொல்கிறது. இதுவே பணியாக சுஜாதா தன் படைப்பாற்றலை செலுத்தியிருப்பாரானால் அற்புதமான பல சிறுகதைகளை தமிழுலகிற்கு சுஜாதா தந்திருப்பார் ஏனைய புற உலகுக்குக் கூட தமிழை அடையாளப்படுத்தியிருக்கலாம்.

இயல், இசை, நாடகத்திற்கு அப்பால் முக்கிய தமிழென அறிவியல் தமிழைக் கொள்ளலாம். அறிவியல் தமிழில் சுஜாதாவின் அக்கறை மிக வியப்பிற்குரியது. கணனி பற்றி எழுபதுகளின் ஆரம்பத்தில் சுஜாதா ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். எனக்குக் கிடைத்த தகவல் துல்லியம் என்றால் ஒன்றைச் சொல்வேன். கணனி பற்றி தமிழில் வெளியான முதலாவது புத்தகம் அது. சுஜாதா எழுதியது. அந்தளவுக்கு அறிவியல் தமிழை விஸ்தரிப்பதில் அவர் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். தமிழ் வாசிக்கத் தெரிந்த யாவரும் எளிதில் உள்வாங்கும் வண்ணம் ரோபோ பற்றி 'என் இனிய இயந்திரா' என்ற புனை கதையை எழுதினார். அறிவியல் தமிழில் எழுதப்பட்ட புதினம் அது.

சுஜாதா பற்றிய சில விமர்சனங்கள் எனக்குள் இருக்கின்றன. அவரிடம் இருக்கக்கூடிய பார்ப்பனிய இயல்பு வெளிப்படும் இடங்கள் என்னளவில் அவரைத் தாழ்த்தி விடுவதுண்டு.

மேலும் இந்திய அதிகார வர்க்கத்திற்கு உதவி புரியக் கூடிய எழுத்துக்களை இவர் தன்னகத்தே கொண்டிருப்பதும் எனக்கு ஒவ்வாத ஒன்று. அதுவும் அவரது பார்ப்பனிய நிலைப்பாட்டிலிருந்து வருவதுதான். இவைபற்றியெல்லாம் நிறைய விமர்சிக்கலாம். ஆனால் இந்த இடத்தில் அது தேவையா?

ஆனால் ஒன்று, தமிழ்த் தேசியத்தின் மீது அல்ல, தமிழின் மீதும் அவர் தீராத காதல் கொண்டிருந்தார். சங்க இலக்கியத்திலிருந்து, நவீன இலக்கியம் வரை அவருக்கு ஆழ்ந்த புலமை இருந்தது. அது போக அவற்றைத் தீர வாசித்து தமிழை மெச்சும்படி வெளிப்படுத்தினார். தமிழ் வளம்மிக்க உன்னத மொழி என்பதனை அவர் அடிக்கடி எடுத்துக் காட்டியபடி இருந்தார். இது கூட சுஜாதாவை நான் மெச்சுவதற்குக் காரணம்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

இந்தியன், ரோஜா, பம்பாய், உயிரே, சிவாஜி, அந்நியன், தசாவதாரம் போன்ற பல தமிழ்த்திரைப்படங்களுக்கு வசனம் எழுதி சினிமாப்பிரமுகர் ஆனதனால் அவரால் இன்னும் செய்யப்பட்டிருக்கலாம் என்ற வேலைகள் செய்யப்படாமலே போய்விட்டன. அது மாத்திரமின்றி அவரது விகாரமான சில முகங்களும் வெளித் தெரிந்து விட்டன.

யாவற்றிலும் மேலான ஆச்சரியம் ஒன்று சுஜாதாவிடம் எனக்கு இருக்கிறது. 2006இல் தமிழ் நாட்டுக்கு நான் சென்றபோது சுஜாதாவைச் சந்தித்தேன். பலதும் பற்றிக் கதைத்தோம். மகாகவி வாழ்ந்த அளவெட்டிதான் எனது ஊர். வீடும் பக்கம்தான் என்றேன். மகாகவி பற்றி சுஜாதா அடிக்கடி ஆனந்த விகடனில் எழுதி வருபவர். அந்த நம்பிக்கையில் தான் அதைச் சொன்னேன்.

அவருக்கோ மகா ஆனந்தம். "மகாகவியை நீங்கள் கண்டீர்களா? எப்படி இருப்பார்" என்று குழந்தைத்தன மான ஆச்சரியங்களுடன் கேள்விகளை விசிறினார். அப்படி அவர் கேட்டதில் ஒன்றை நான் உணர்ந்தேன். மகாகவியையிட்டு அவருக்குப் பெரும் பிரமிப்பு இருக்கிறது. அதை அவரே சொன்னார்."பாரதியாருக்குப் பிறகு மகாகவிதான் பெருங்கவிஞர். அவருடைய மகன் சேரனும் நல்ல கவிஞர்"

அவர் வேறொன்றும் சொன்னார். அதுவும் எனக்கு இன் னொரு ஆச்சரியம். "தமிழீழம் ஏன் கட்டாயம் வேண்டு மென்றால், அப்போதுதான் தமிழ் அழியாது" அவர் அதை மீண்டும் மீண்டும் அழுத்திச் சொன்னார். 'ஈழத்தமிழர்கள் தான் தமிழை வாழ வைப்பார்கள். அவர் களால் தான் அது இயலும்.'

அவரது ஒரு குறிப்பும் அதனைச் சொன்னது. சங்ககாலத்தின் பல தமிழ் சொற்கள் ஈழத்துத் தமிழில் இப்போதும் விரிவாகக்கிடக்கிறது. தான் உணர்ந்த அளவில் அவர் ஈழத்துத் தமிழரில் வைத்திருக்கும் நம்பிக்கை மிக அதிகம் ஓர் உண்மையை மனதார நம்புகிறார் சுஜாதா. அவ்வளவுதான்.

சுஜாதாவிடம் இருந்து விடைபெற்று வருகிறபோது சுஜாதா என் மைந்தர்கள் இருவருக்கும் சொன்னார்: "நீங்கள் இலண்டனில் இருந்த போதும் தமிழை மிக நன்றாகப் பேசுகிறீர்கள். மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழர் நாங்கள் பெருமை மிக்க இனம். இளைய தலைமுறையினரான நீங்கள்தான் தமிழைக் காக்க வேணும். தமிழ்நாட்டுத் தமிழரால் அது இயலாது. ஈழத்துத் தமிழரால்தான் அது இயலும். அதை ஞாபகம் வைத்திருங்கள்"

தமிழை மிக அதிகமாக நேசித்த சுஜாதாவுக்கு என் தமிழால் வணக்கம் வைக்கிறேன். உங்கள் தமிழ்ப்பணிக்கு மிக்க நன்றி சுஜாதா.

அறிவியல் தகவல்கள்

சி. மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

உயிரினங்கள் வாழ்வது பூமியில் மட்டும் தானா?

பூமியில் மட்டும்தான் உயிரினங்கள் வாழுகின்றன என்று உறுதியாகக் கூற எவ்வித நியாயமும் இல்லை. அதே சமயம் வேறு கோள்களில் வாழ்பவர்கள் இங்கு பறக்கும் தட்டுக்களில் வந்து போகிறார்கள் என்ற புலடாவையும் நாம் ஏற்கத் தேவையில்லை.

பிரபஞ்சத்தில் வாழும் எந்த உயிரினமும் பிரபஞ்சத்தின் பௌதிக இயலுக்கு அடங்கியதாகவே இருக்க முடியும். பௌதிகவியலுக்கு புறம்பான கூற்றுக்கள் அனைத்தும் நிராகரிக்கப் பட வேண்டியவையே. வேற்றுக் கோள்களில் உயிரினங்கள் இருக்கும் சாத்தியம் உண்டென்று நம்பும் அறிவியலாளர்கள் கடந்த சில தசாப்தங்களாக அப்படியான உயிரினங்களைத் தேடிக்கொண்டே இருக்கின்றாகள்?.

இந்த முயற்சியில் முதலில் தேடிக் கொண்டிருக்கும் இடம் கதிரவனின் மற்றைய கோள்களும் அவற்றின் உபகோள்களும் (சந்திரன்கள்) தான். சனிக் கோளின் ரைற்ரன், வியாழனின் யூறோப்பா ஆகிய இரு உபகோள்களிலும் உயிரினம் இருப்பதற்கான சூழல் அவதானிக்கப்பட்டாலும் நுண்ணுயிர்களுக்கு மேல் பரிணாம வளர்ச்சி கொண்டவையாக அவை இருக்கும் சாத்தியம் இல்லை என்பதே ஆய்வுகளின் முடிவு.

எமது அண்மைக் கோளான செவ்வாயில் உயிரினங்கள் வாழக் கூடிய சூழல் ஒரு காலத்தில் நிலவியதாகக் கருதப் படுகிறது. ஆனால் இன்று நிலை வேறு. இதையும் மீறி அங்கு உயிரினங்கள் எஞ்சி இருந்தாலும் அவை எம்மை ஒத்த வளர்ச்சிகொண்ட உயிரினங்களாக இருக்கும் சாத்தியம் இல்லை.

இந்தச் சூழலில் 1995ல் கண்டுபிடிக்கப் பட்ட வேற்று விண் மீன் ஒன்றைச் சுற்றும் கோள் இந்த நம்பிக்கைக்கு மேலும் திடத் தன்மையை ஊட்டியது. அந்தக் கண்டு பிடிப்பைத் தொடர்ந்து இன்றுவரை 250க்கு மேற்பட்ட வேற்று விண்மீன் கோள்கள் அவதானிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றில் பூமியை ஒத்த சூழல் நிலவுவதும் அவதானிக்கப் பட்டுள்ளது.

இன்றுவரை இவை எவற்றிலுமே எம்மை ஒத்த அறிவு வளர்சிசி கொண்ட உயிரினங்களோ அல்லது சிறு உயிரினங்களோ வாழ்வதற்கான ஆதாரம் கிடைக்காவிட்டாலும் ஒரு பேச்சுக்கு எங்களிலும் கூடிய அறிவு வளர்ச்சி கொண்டவர்கள் வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொண்டு அவர்களுக்கும் எமக்கும் உள்ள இடைவெளியை அவதானிப்போம்.

அயன்ஸ்ரீன் கோட்பாட்டின் படி எந்தப் பொருளும் ஒளியின் வேகத்தை தாண்ட முடியாது. ஒளியாக மாறிய ஒரு பொருள்தான் ஒளியின் வேகத்தில் பயணிக்க முடியும். ஒளியின் வேகமான மணிக்கு 70 கோடி மைல் வரையான வேகத்தில் பிரயாணம் செய்தாற்கூட எமது அடுத்த வீட்டுக்கு போக அதாவது பக்கத்து நட்சத்திரமான அல்பா சென்ரோறியை அடைய நான்கு ஆண்டுகளுக்கு மேல் தேவைப் படும். மனிதன் ஈட்டிய அதி வேகமான மணிக்கு 25 ஆயிரம் மைல் வேகத்திற் செல்வோமானால் ஒரு இலட்சம் ஆண்டுகள் வரை தேவைப்படும்.

அவர்கள் எங்களைவிட அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றில் பன்மடங்கு வளர்ந்து எங்கள் 25 ஆயிரம் மைல் வேகத்தைப் போல் 100 மடங்கு வேகத்தில் பயணம் செய்யக் கூடியவர்களாக இருந்தாற்கூட இங்கு வர ஆயிரம் ஆண்டுகள் தேவை. இங்கும் ஒரு விடயத்தை பேச்சுக்கு எடுக்க வேண்டி உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழவும் அவர்களால் முடியும் என்று.

இவ்வளவு வலுவும் ஆற்றலும் கொண்ட இந்த வேற்றுலக வாசிகள் இங்கு வந்தால் எவ்வளவு செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். நேரடியாகவே வெள்ளை மாளிகைக்கோ வேறு முக்கிய இடங்களுக்கோ வரக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இங்கிருந்து ஒளியின் வேகத்தில் பதிலை எதிர் பார்த்து செய்தி அலைகள் அனுப்புவது போன்று பல வழிமுறைகளை வேற்று உயிரினம் பற்றிய தடயம் தேடக் கையாளுகிறார்கள். இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

இந்தச் சூழலிற்தான் சிலர் அறிவியலுக்கு ஏற்பற்ற முறையில் பறக்கும் தட்டுப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். இந்த அறிவுப் பதர்களின் சேட்டை அறிவியலுக்கு புறம்பானது.

Great Opportunity has arisen in the Medway Towns, Kent.

- ▶ for Shop Manager and Shop Assistant.
- ▶ Can be suitable for young couple.
- ▶ Experience not essential as Full Training will be given.
- ▶ Salary £20K plus bonus.
- ▶ Free Accomodation provided
- ▶ Business is part of a small chain of shops.

Contact: **Arun** on **07866 496 541**
e-mail: kentmart@hotmail.co.uk.

இளம் குடும்பத்திற்கு
இனிய வாய்ப்பு
சரியான தருணம் இதுவே
உங்கள் வாழ்வில் சாதிக்க
ஓர் சந்தர்ப்பம்

Kent இல் ஒரு கடை நடாத்த
இளம் தம்பதியினர் தேவை

மேலே வசதியான வீடு
கீழே வளமான கடை

கடை நடாத்த அனுபவம்
தேவை இல்லை

ஆர்வம் ஒன்றே போதும்

எதற்கும் தொடர்பு கொண்டு

என்னதான் விசயம் என்று
பாருங்களேன்..

தொடர்புகட்கு: **அருண்**
07866 496 541